(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 3(5).] **பாராளுமன்றம்**

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2019 செப்தெம்பர் 06 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

# 2019 செப்டம்பர் 17, செவ்வாய்க்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர்,— இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கின்ற இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் உள்ளடங்கிய ஐந்து உறுப்பினர்களுக்காக சம்பளம் வழங்கல், அச்சட்டத்தின் 17 ஆம் வாசகத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டுமென்பதோடு, அது திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்பட வேண்டியதொன்றாகுமென்பதாலும்;

நிலைபெயர்கால நீதிச் செயலுக்காக ஒத்துழைப்பு வழங்குவதற்காக அரசினால் நிறுவப்பட்ட இந்நிறுவனம், நல்லிணக்கத்தை இலக்காகக் கொண்டு, மோதல்கள் காரணமாக இன்னலுற்ற ஆட்களுக்கு, தனியாள் மற்றும் கூட்டுக் குழுக்களுக்கு இழப்பீடுகள் வழங்குவதற்காக இழப்பீடு தொடர்பாக கொள்கைகளை ஒழுங்கு முறைப்படி தயாரித்து அமைச்சரவைக்கு விதப்புரை மேற்கொள்ளல், காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தினால் வழங்கப்படும் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தல், இழப்பீட்டுக் கொள்கைகளை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அமுல்படுத்தல், இன்னலுற்ற ஆட்களுக்கு எவ்வித பாரபட்சமுமின்றி அவர்களின் மறுமலர்ச்சி, புனர்வாழ்வு, நிர்வாகம் உள்ளடங்கிய ஏனைய நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், நலன்புரிச் சேவைகளை வழங்கல் போன்றவை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ளதாலும்;

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் பற்றிய விடயங்களுக்குப் பொறுப்பு அமைச்சரான பிரதமரினால் 2019 மே 16 ஆம் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, 2019 யூன் 04 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு கீழ்க் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் சம்பளம் வழங்க தீர்மானிக்கப்பட்டதாலும்;

(அ) இவ்வலுவலகத்தின் தவிசாளருக்கு ரூபா 135,000.00 மாதாந்த கொடுப்பனவும் ரூபா 10,000.00 மாதாந்த தொலைபேசிக் கட்டணத்துடன் மாதத்திற்கு வாகனப் பாவனைக்காக 225 லீட்டர் எரிபொருள் உட்பட போக்குவரத்திற்காக உத்தியோகபூர்வ வாகனமொன்று வழங்குதல்;

(ஆ) இவ்வலுவலகத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கு ரூபா 90,000.00 மாதாந்த கொடுப்பனவும் ரூபா 8,000.00 தொலைபேசிக் கட்டணத்துடன், ஏனைய உறுப்பினர்களது வீட்டிலிருந்த அலுவலகத்திற்குள்ள தூரத்தினடிப்படையில் 350 கி.மீ வரை 25,000.00 ரூபாவையும் 350 கி.மீ. அல்லது அதற்கு மேற்பட்ட தூரத்திற்கு 50,000.00 ரூபாவையும் மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவாக வழங்குல்.

அதன்பிரகாரம், 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டத்தின் 17 ஆம் வாசகத்தின் பிரகாரம், இவ்வலுவலகத்தின் தவிசாளர் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கான திரட்டு நிதியின் மீது பொறுப்பிக்கப்படவேண்டிய மேற்படி சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக.

*

நிதி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 07 ஆம் திகதிய 2122/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 21 ஆம் திகதிய 2124/2 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 21 ஆம் திகதிய 2124/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூலை 03 ஆம் திகதிய 2130/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூலை 10 ஆம் திகதிய 2131/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் பதில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூலை 18 ஆம் திகதிய 2132/13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதி தீர்வை வரி தொடர்பில், 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2019 யூன் 11 ஆம் திகதிய 2127/13 ஆம் இலக்க விசேட வர்த்தமானிப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 8 ஆம் மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ் ஒட்டுத்துண்டு மற்றும் ஒட்டுத்துண்டு முகாமை முறைமை தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூன் 20 ஆம் திகதிய 2128/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2019.)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2019 ஒக்டோபர் 11, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.11/' 18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றைத் தாபித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் முக்கிய காரணிகளாக இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்காற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— ஹஜ் யாத்திரைச் சட்டமொன்றை அறிமுகப்படுத்தல்,— வருடாந்தம் ஹஜ் யாத்திரையில் ஈடுபடுகின்ற இலங்கை பக்தர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும், அது தொடர்பான நிருவாக அமைப்பொன்றை தாபித்து சட்ட முறையான ஏற்பாடுகளை வகுக்கவும், அரசாங்கத்தால் "ஹஜ் யாத்திரைச் சட்டமொன்று" அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்தல்,— கண்டி மாவட்டத்தை புவியியல் ரீதியில் நோக்குகையில் கடல் பிரதேசத்திலிருந்து தூரமாக அமைந்திருப்பதனால் இம்மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் புரதத் தேவையை நிறைவு செய்வதற்காக கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்து குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பினால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்பைக் குறைத்தல்,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பு காரணமாக சூழலுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளமையால் இந்த சூழல் பாதிப்பை குறைப்பதற்கான துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகளை அகற்றுதல்,— நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் கண்டி வைத்தியசாலையை இரண்டாவது தேசிய வைத்தியசாலையாக முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்படி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகள் அனைத்தையும் அகற்றத் துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் பெருவாரியாகப் பரவும் நோய்களைத் தடுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் வெள்ளப்பெருக்குக்குப் பின்னர் அனர்த்தத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் நீர் வடிந்தோடியதன் பின்னர் எலிக்காய்ச்சல், வயிற்றோட்டம் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக குறிப்பிட்ட பிரதேசங்களில் பொது சுகாதார பரிசோதகர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதனால், அத்தகைய பெருவாரியாகப் பரவும் நோய் நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து உச்ச பயன் பெறுதல்,— ஒரு விவசாய நாடான எமது நாட்டின் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து விவசாய கைத்தொழிலுக்கு பாரிய சேவையாற்றப்படுகின்ற போதிலும், இந்த ஆற்று நீர் பாரியளவு பயன்படுத்தப்படாது கடலுடன் கலப்பதாக அறிவியல்சார் ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால், மகா பராக்கிரமபாகு மன்னனுடைய காலத்தைப் போன்று இந்த நீர் வளத்தைக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு உச்ச பயன் பெறக்கூடியவாறு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்தல்,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டுக்கு திறமையைக் கொண்டுள்ள பெரும் எண்ணிக்கையானோர் இருப்பதனால் மேற்படி ஆட்களை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டுசெல்லக் கூடியவகையில் கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 20/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்துக்குரித்தாக இருந்த கரப்பந்தாட்ட விளையாட்டின் பெருமையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இற்றைக்கு ஏறத்தாழ ஒரு தசாப்தத்துக்கு முன்னர் புத்தளம் மாவட்டத்தின் பாடசாலைகளிலிருந்து உருவாகிய திறமைவாய்ந்த கரப்பந்தாட்ட விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெளிப்படுத்திய திறைமைகளின் காரணமாக புத்தளம் மாவட்டத்துக்கு கரப்பந்தாட்ட விளையாட்டு மூலம் பெருமையானதோர் இடம் கிடைத்திருந்த போதிலும், இன்றளவில் அந்த நிலைமையில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதனால், மீண்டும் அந்தப் பெருமையை புத்தளம் மாவட்டத்துக்கு கொண்டு வருவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 21/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலை ஒன்றைத் தாபித்தல்,— மக்களின் போஷாக்குத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான புரதச் சத்தை பெற்றுக் கொடுக்கவும், வருடாந்தம் ரின் மீன் இறக்குமதிக்காக வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், மேலும் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்கத் தேவையான அனைத்து வளங்களும் புத்தளம் மாவட்டத்தில் இருப்பதாலும், அம்மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை சிலாபம் வரை நீடித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அதிவேக நெடுஞ்சாலைகள் மிக முக்கியமானவையாக உள்ளதாலும், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டம் மிக துரிதமாக அபிவிருத்தியடைந்து வருவதாலும், அந்த அபிவிருத்தி வேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தற்போது கொழும்பிலிருந்து கட்டுநாயக்க வரையுள்ள அதிவேக நெடுஞ்சாலை சிலாபம் வரை நீடிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வடமேல் மாகாணத்தில் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக மருத மர நடுகைக் கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— மண்ணில் உள்ள நீரைப் பாதுகாக்கும் ஆற்றலைப்போன்றே மண்ணரிப்பினை குறைக்கும் பண்புடைய நீண்ட ஆயுட்காலத்தைக்கொண்ட மருத மரத்தை வடமேல் மாகாணத்தின் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக நடுகைசெய்யும் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 24/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— பத்தலங்குண்டு தீவுவாசிகளான மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டிக் குடாநாட்டுக்கு அருகில் உள்ள பிரதான தீவுகளிலொன்றான பத்தலங்குண்டு தீவைச்சேர்ந்த மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகள் இற்றைவரை முறையான கவனத்திற்கு இலக்காகவில்லை என்பதால், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் அம்மக்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 25/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— தற்பொழுது உலகில் நீர்வாழ் தாவரங்களுக்கு பெருங் கேள்வி நிலவுவதோடு, அதன் மூலம் எமது நாட்டுக்கு பெருமளவில் அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய பரந்துபட்ட வாய்ப்பு உருவாகியுள்ளதோடு, அண்மையில் ஜப்பான் நாட்டு நிபுணர்களால் தமது ஆராய்ச்சி அறிக்கையொன்றில் நீர்வாழ் தாவர வளர்ப்புக்கு புத்தளம் மாவட்டத்தின் கரையோரம் சார்ந்த பிரதேசம் மிகவும் உகந்ததெனச் சுட்டிகாட்டியுள்ள பின்னணியில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றைப் புத்தளம் மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை நிறுவுதல்,— வடமேல் மாகாணத்தில் தற்போது புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளமையினால் அந்த நோயாளிகளுக்காக வடமேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலையொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 27/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலை ஒன்றைத் தாபித்தல்,— இலங்கையின் பிரதான சிறுவர் வைத்தியசாலையாகிய றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் காணப்படுகின்ற பாரிய இட நெருக்கடியைக் குறைப்பதற்காகவும் வட மேல், வட மத்திய மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்குப் பயன்தரும் வகையிலும் வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலையொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 28/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலை ஒன்றைத் தாபித்தல்,— நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தினை ஒரு சுற்றுலா வலயமாக முன்னேற்றுவதற்கு எதிர்பார்ப்பதால் இக்கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு தேவையான மனித வளத்தை பயிற்றுவிப்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலையொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 29/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்பிட்டி சார்ந்த பிரதேசங்களில் பனைக் கைத்தொழிலை ஊக்குவித்தல்,— வட மேல் மாகாணத்தின் கல்பிட்டி பிரதேசத்தில் பனை சார்ந்த கைத்தொழில் கடந்த சில வருடங்களாக பெரும் சரிவை சந்தித்துள்ளதால், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளின் பிரகாரம், எதிர்காலத்தில் கல்பிட்டி பிரதேசத்தை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்திற்கு நேர் ஒத்ததாக அப்பிரதேசத்தில் பனைக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கோழிப் பண்ணை உரிமையாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற 'பற்றரி கேஜ்' முறைமையை நிறுத்துதல்,— இலங்கை பண்டைய காலந்தொட்டு உயிரினங்கள் மீது அன்பு செலுத்துகின்ற பௌத்த நாடாக விளங்கிய போதிலும், இன்றளவில் சில கோழிப் பண்ணையாளர்கள் பயன்படுத்துகின்ற பற்றரி கேஜ் முறைமை காரணமாக விலங்குகள் பெரும் சித்திரவதைக்குள்ளாவதனாலும், அதிக முட்டை உற்பத்தியின் மூலம் சிறிய அளவிலான கோழிப் பண்ணையாளர்களின் தொழில்கள் ஆபத்தான நிலைக்கு உள்ளாகியுள்ளதன் காரணத்தினாலும், மேற்படி மனிதாபிமானமற்ற முறைமையை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுப் பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வருடாந்தம் பால் மா இறக்குமதிக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுவதுடன், இப்பணத்தை எமது நாட்டிற்குள்ளேயே சேமித்துக்கொள்ள முடியுமெனில் அது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் உந்துசக்தியாக அமையுமென்பதால் பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரிதமான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/ ’19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வடமேல் மாகாணத்திலுள்ள குருநாகல் மாவட்டம் மிகவும் பெருமைவாய்ந்த வரலாற்றிக்கு உரிமை கோரும் தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த பல இடங்களைக் கொண்டதொரு மாவட்டமாக இருப்பதுடன், பண்டைய காலத்தில் குருநாகல், தம்பதெனிய மற்றும் யாப்பகுவ போன்ற இராச்சியங்களும் இம்மாவட்டத்திலேயே அமைந்திருந்ததெனினும் தற்போது இந்த புராதன இடங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக பாரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளதால் மேற்படி தொல்பொருளியல் இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.33/ ’19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சகல துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்றை நடைமுறைப்படுத்தல்,— எந்தவொரு நாட்டிலும் வெற்றிகரமான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று காணப்படுவது அந்த நாட்டில் வாழும் பிரசைகளுக்கு முக்கியமாகும் என்பதுடன், இலங்கையில் அரசதுறை மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்காக ஓய்வூதிய முறையொன்று அல்லது ஊழியர் சேமலாப நிதிய முறையொன்று நடைமுறையில் இருந்த போதிலும், நாட்டில் முறைசாரா துறையிலுள்ள ஊழியர்களுக்காக அத்தகைய சமூக பாதுகாப்பு முறையொன்று நடைமுறையில் இல்லாமையால், அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/ ’19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் சிறுநீரக நோயாளிகளுக்காக வைத்தியசாலையொன்றை நிர்மாணித்தல்,— வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறுநீரக நோய் பாரியளவில் அதிகரித்துள்ளமையால், சிறுநீரக நோயாளர்களுக்காக வடமேல் மாகாணத்தில் வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/ ’19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் தலசீமியா நோயாளர்களுக்கென வைத்தியசாலையொன்றைத் தாபித்தல்,— அண்மைக் காலத்தில் இலங்கையில் அதிக எண்ணிக்கையான தலசீமியா நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டிருப்பது குருநாகல் மாவட்டத்திலாகும் என்பதுடன் இதுவரை மேற்படி நோயாளிகளுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான தனியான வைத்தியசாலையொன்றை தாபிக்கப்படாமையினால் மேற்படி நோயாளிகளுக்கு தனியான வைத்தியசாலையொன்றை குருநாகல் மாவட்டத்தில் தாபிக்க வேண்டும் என்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/ ’19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்தல்,— இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான விகாரைகள் காணப்படுவதும், அதிகப்படியான பிக்குமார் வசிப்பதும், கூடுதலான பௌத்தர்கள் வாழ்வதும் மற்றும் அதிகளவான சாசன பாதுகாப்பு அதிகார மன்றங்கள் நடைமுறையில் உள்ளதுமான வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

பா. 37/ ’19

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்தின் விளைவாக பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்தில் வீடுகள், காணிகள் உள்ளிட்ட சொத்துக்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக நிலக்கீழ் சுரங்கங்கள் அகழப்படுவதால் பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்திலுள்ள மக்கள் தங்களது வீடுகளையும் காணிகளையும் இழந்து தற்போது மூன்று வருட காலம் கடந்துள்ள நிலையில், இடம்பெயர்ந்துள்ள இம்மக்களுக்கு இற்றைவரை எவ்வித இழப்பீட்டுத் தொகையோ அல்லது வேறு நிவாரணமோ கிடைக்கவில்லை என்பதால் இம்மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 38/ ’19

கௌரவ ஹேஷா விதானகே,— புகையிரதம் மூலம் காய்கறிகளை எடுத்துச் செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பித்தல்,— பதுளை மாவட்டம் உள்ளிட்ட காய்கறி உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலிருந்து காய்கறி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை குறைந்த செலவிலும் விரயத்தினை இயன்றளவு குறைக்கும் வகையிலும் புகையிரதம் மூலமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களிலுள்ள சந்தைகளுக்கு எடுத்து செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/ ’19

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக நீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக தற்போது ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 8,394 குடும்பங்கள் பாரிய நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதனால் அந்த மக்களுக்கான நீர் வசதியை வழங்குவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை நடமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக தொடர்ச்சியாக வெள்ளப்பெருக்கினால் அனர்த்தத்துக்கு உட்படும் இரத்தினபுரி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/ ’19

கௌரவ ஹேஷா விதானகே,— எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்குத் தனித்துவமான மரபுரிமைகளைப் பாதுகாத்தல்,— கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சப்ரகமுவாவுக்கு உரித்தான தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதுடன், இன்று வர்த்தகமயமாக்கல் காரணமாக மேற்படி தனித்துவமிக்க பண்புகள் அழிவடைகின்ற அச்சுறுத்தல் காணப்படுவதனால் எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்கு தனித்துவமிக்க மரபுரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/ ’19

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற அச்சுறுத்தலைக் கொண்ட பல இடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் மேற்படி நிலைமைகளை குறைப்பதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/ ’19

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— இணையத் தளங்களில் ஆபாச காணொளிகள் உலாவுவதை தடுக்கும் பொருட்டு சிறப்பு அலகொன்றைத் தாபித்தல்,— தற்போது அதிகளவில் இணையத் தளங்கள் ஊடாக பல்வேறு ஆபாச காணொளிக் காட்சிகள் உலாவுவதன் மூலம் ஆட்களின் அந்தரங்கத்துக்கு பாதிப்பேற்படுவதோடு குறிப்பாக பெண்கள் அதன் மூலம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதால், இவ்வாறான காணொளிக் காட்சிகளை தன் வசம் வைத்துள்ள, விநியோகிக்கின்ற மற்றும் உருவாக்குகின்ற ஆட்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு பயன்மிக்க சிறப்பு பிரிவொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினுள் கீழ் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/ ‘19

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற உளநல ஆலோகர்களை அல்லது போசகர்களை நியமித்தல்,— தற்போது பரவலாக காணக்கூடியதாக உள்ள இளைஞர் யுவதிகள், மாணவ மாணவியர்கள் தற்கொலை செய்து கொள்ளும் போக்கினை தடுப்பதற்கு அனைத்து அரச கல்வி நிறுவனங்களுக்கும் பயிற்சி பெற்ற உளநல ஆலோசகர்கள், போசகர்கள் நியமிப்பட வேண்டுமென அல்லது மேற்படி கல்வி நிறுவனங்களில் தற்போது பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு உளநல ஆலோசனை தொடர்பான சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/ ’19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல்,— 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மூலம் மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பீடமொன்றை நிர்மாணிக்க முன்மொழியப்பட்டுள்ளதோடு மேற்படி முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக சகல பிள்ளைகளுக்கும் 9 ஆம் தரம் வரை அவர்களது சமயங்களின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்தல் உகந்ததென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 47/ '19

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— கொலொன்னாவ மாநகரசபையை நிறுவுதல்,— கொழும்பு நகரத்தையும் அண்டிய நகரங்களையும் நிர்வகிப்பதற்காக கொழும்பு, கடுவெல மற்றும் கோட்டே எனும் மூன்று மாநகரசபைகள் நிலவியபோதிலும், இந்த மூன்று மாநகரசபை ஆளுகைப் பிரதேசங்களினதும் எல்லையில் அமைந்துள்ள கொலொன்னாவ தேர்தல் தொகுதி இரண்டு நிர்வாக அலகுகளான கொலொன்னாவ நகரசபை மற்றும் கொட்டிகாவத்த – முல்லேரியாவ பிரதேச சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருவதால் ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வேறுபாடுகளைத் தோற்றுவிக்க இது காரணமாக அமைந்துள்ளதோடு சுற்றுப்புறத்தில் நிலவுகின்ற மாநகரசபைகள் நிர்வாகத்தின் வினைத்திறனின்பேரில் துரித அபிவிருத்தியை இன்றளவில் அடைந்துள்ளமையால், ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு கொலொன்னாவ நகரசபையையும் கொட்டிகாவத்த – முல்லேரியா பிரதேச சபையையும் ஒருங்கிணைத்து கொலொன்னாவ மாநகரசபை நிறுவப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 49/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— வெற்றிலை செய்கையை மேம்படுத்தல்,— கம்பஹா மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்ற அனேகமானவர்களின் வாழ்வாதாரமாகிய வெற்றிலை செய்கையானது நாட்டுக்கு அந்நியசெலாவனியை ஈட்டித் தருகின்ற விவசாயப் பயிர் என்பதோடு, இலங்கையிலிருந்து வெற்றிலையை கொள்வனவு செய்கின்ற பிரதான நாடொன்றாகிய பாகிஸ்தான் அண்மையில் அந்நாட்டுக்கு இறக்குமதி செய்கின்ற வெற்றிலைக்கு விதித்துள்ள வரி காரணமாகவும், உள்நாட்டு பயிர்ச்செய்கைக்கு தாக்கம் ஏற்படுத்துகின்ற பல விடயங்கள் காரணமாகவும், உள்நாட்டில் வெற்றிலை விலை மிகவும் குறைந்துள்ள பின்னணியில் வெற்றிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிகளும் ஒழுங்கீனமாகியுள்ளதாலும் இத்தகைய நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ள வெற்றிலை செய்கையாளர்களை மேம்படுத்தவும், தேவையான இறக்குமதி திசைகளை கண்டறிவதற்கும் அவசியமாகின்ற அரசாங்கத்தின் தலையீட்டை வினைத்திறன்மிக்கதாக மேற்கொள்வதன் மூலமாக வெற்றிலை செய்கையை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 50/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்பட்ட பிணையாளிகளை அப்பட்டியலில் இருந்து விடுவித்தல்,— நாட்டில் இயங்கும் வர்த்தக வங்கிகளினால் நாட்டின் பிரசைகளுக்கு பல்வேறு தேவைகளுக்காக கடன் வழங்கும் போது ஆதனப் பிணைகளும் தனிநபர் பிணைகளும் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் இவ்விடயத்தில் பிணையாளி கடன்பெறுனருக்கு உதவியாக அதைச் செய்தாலும் ஏதேனும் காரணத்தால் அவ்வாறான கடனாளிகள் கடனை மீளச் செலுத்தத் தவறும் பட்சத்தில் கடனாளி உள்ளிட்ட பிணையாளிகளின் பெயர்களும் கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்படுவதால் பிணையாளிக்கு பாரிய அநீதி ஏற்படுவதுடன் கொடுக்கல் வாங்கல் சார்ந்த பிரச்சினை தீர்க்கப்படும் வரை பிணையாளிக்கு வங்கிக் கடனொன்றை பெற்றுக்கொள்ள இயலாத நிலையொன்று ஏற்படுவது மாத்திரமின்றி புதிய தொழில்முயற்சியாளர்கள் உருவாகுவதற்கும் மொத்த தேசிய உற்பத்திக்கும் பாதகமான முறையில் தாக்கம் ஏற்படுவதால் பிணையாளிகள் சார்பாக நெகிழ்ச்சிமிக்கதொரு கொள்கையினை பின்பற்றி கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்பட்டுள்ள பிணையாளிகளை அப்பட்டியலில் இருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/ ’19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தனியார் உயர்கல்வி நிறுவனங்களை உயர் தரத்துடன் பேணிச் செல்லும் நோக்கில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்தல்,— இலங்கையில் பல தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் தாபிக்கப்படும் போக்கு காணப்படுவதோடு முறையான கல்வியானது ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு உதவியளிப்பதனால் தனியார் கல்வி நிறுவனங்களின் உருவாக்கமானது பல துறைகளில் நாட்டிற்கு சாதகமாக அமைகின்ற போதிலும் குறிப்பிட்ட நிறுவனங்களிலிருந்து பெற்றுத்தரப்படுகின்ற சேவைக்குரிய தரம் பேணப்படுகின்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்துடன்கூடியதாக பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுப்பது மிகவும் முக்கியம் என்பதனால் அனுபவம் வாய்ந்த புத்தி ஜீவிகளினதும் கல்வியியலாளர்களினதும் தலையீட்டின் கீழ் உரிய பாடநெறிகளுக்கான உள்ளடக்கத்தினை ஆராய்ந்து தனியார் உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து வழங்கப்படுகின்ற சேவையினை உயர் தரத்துடன் பேணிச்செல்வதற்காக தற்போது காணப்படுகின்ற சட்ட முறைமையானது பலம் பொருந்தியதாக அமையவில்லை என்பதால் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தினை துரிதமாகத் திருத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/ ’19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தனியார் நிதி நிறுவனங்களைப் பேணிச் செல்வதற்கு ஏற்புடைய சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக பண வைப்பாளர்களைப் பாதுகாத்தல்,— தனியார் நிதி நிறுவனங்களில் பணத்தை வைப்புச் செய்யும்போது பண வைப்பாளர்களின் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் தோன்றுவதாலும், பண வைப்பாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் நிதிக் கம்பனிகளில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதிய சட்ட ஏற்பாடுகள் இன்மையாலும், 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் திருத்தங்களையும், வலுவிழந்த சட்டத்தைப் பலப்படுத்தும் பணிகளையும் துரிதமாக மேற்கொண்டு, அதற்கு உதவியாக 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம், 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் மற்றும் 19 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) ஆகிய சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக நாட்டினுள் பலம் வாய்ந்த நிதிப் பிரிவொன்று கட்டியெழுப்பப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.53 / ’19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— உரிய தரத்தைக் கொண்ட சிறு ஏற்றுமதி பயிர்களை உற்பத்தி செய்தல்,— சிறு ஏற்றுமதி பயிர் உற்பத்தி உரிய தரமின்றி மேற்கொள்ளப்படுவதால் பயிர்செய்கையாளர்களுக்கும் நாட்டுக்கும் பாதகமான தாக்கம் ஏற்படுவதோடு, அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு ஏற்றுமதிகளை அதிகரிப்பது உந்துசக்தியாக உள்ள போதிலும் இலங்கையின் சிறு ஏற்றுமதி பயிர்களுக்கு சர்வதேசத்தில் காணப்பட்ட நற்பெயர், கொறக்கா புளிக்கு யூரியா கலத்தல் போன்ற மோசடியான செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளதோடு எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற சிறு ஏற்றுமதி பயிர்களுக்கு நிலவிய சர்வதேச கேள்வி குறைந்துள்ளதால் உள்நாட்டு விலையும் குறைந்துள்ள பின்னணியில் இந் நிலைமையினை உடனடியாக மாற்றி உற்பத்தி செய்யப்படுகின்ற சிறு ஏற்றுமதி பயிர்களின் தரத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/ ’19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தொழில் முயற்சி வங்கி முறையை அறிமுகம் செய்தல் மற்றும் தாபித்தல்,— நாடு பூராகவும் அமைந்துள்ள வணிக வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களை உற்சாகப்படுத்துவதற்காக வழங்கப்படும் நிதி அனுசரணை போதியதாக அமையாமையால், உலகில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் புழக்கத்தில் உள்ள தொழில்முயற்சி வங்கி முறைமையை இலங்கையில் பிரபல்யப்படுத்துவதன் மூலம் புதிய தொழில்முயற்சியாளர்களின் உருவாக்கத்தில் அதிகரிப்பை ஏற்படுத்த முடியும் என்பதுடன், புதிய கருத்துக்களுடன் வங்கிக்கு வருகை தரும் இளைய தொழில்முயற்சியாளர்களது தேவைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு நிதி வசதியை மாத்திரமன்றி வர்த்தக அறிவையும் தொடர்ச்சியான பாதுகாப்பையும் வழங்குதல் இந்த வங்கி முறைமையிலுள்ள விசேட அம்சமாக காணப்படுவதனாலும், இதன் மூலம் உருவாக்கப்படும் தொழில்வாய்ப்புகளுடன் தேசிய உற்பத்தியும் அதிகரிப்பதனால் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவியாக அமைவதனாலும் தொழில்முயற்சி வங்கி முறையை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 55/ ’19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— ஆயுர்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களை கண்காணித்தல்,— நாட்டில் பல இடங்களில் ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் இடங்கள் அதிகளவில் திறக்கப்படும் போக்கு காணப்படுவதுடன் தொழில்முயற்சியாளர்கள் உருவாகுதல் நாட்டிற்கு நன்மைபயப்பதாக காணப்பட்ட போதிலும், இதனால் சமூகத்திற்கு நன்மை ஏற்பட வேண்டுமென்பதால், அநேகமான ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களில் இடம்பெறுகின்ற முறைகேடுகளைத் தடுப்பதற்கும் இதன் மூலம் சமூக ரீதியான நன்மைகளுடன் சிறந்த சூழலை உருவாக்குவதற்கும் அதிகாரமுள்ள நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களை தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 56/ ’19

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— “இந்திய தமிழ்” தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட இனப் பிரிவினர் எதிர்கால சனத்தொகை மதிப்பீட்டின் போது “மலையக தமிழ்” தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்.— இந்தியாவிலிருந்து இந்நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ள இந்தியர்கள் “இந்திய தமிழ்” தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதுடன் இன்று இவர்கள் “மலையக தமிழ்” என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு இலங்கை பிரசாவுரிமையை பூரணமாக அனுபவித்து வருகின்ற போதிலும் “இந்திய தமிழ்” என்று அவர்களை அடையாளப்படுத்துவதன் மூலம் அவர்களின் இலங்கைப் பிரசாவுரிமை கேள்விக்கு இடமாகின்ற நிலை காணப்படுவதனால், சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சனத்தொகை மதிப்பீடுகளின் போது இந்த இனப் பிரிவினரை “மலையக தமிழ்” எனும் தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டும் என்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 57/ ’19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்றினைத் தாபித்தல்,— தேசிய நல்லிணக்கத்தையும் மற்றும் இனங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் மேலும் பயனுறுதியான விதத்தில் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால இலக்குகளுக்கு அடியெடுத்து வைக்கும் நோக்கத்துடன், இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 58/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— இலங்கையில் தற்போது மிக வேகமாகப் பரவிவரும் ஆக்கிரமிப்பு தாவர வகைகளின் பரவுதலை இல்லாதொழிப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— இலங்கையில் தற்போது ஆக்கிரமிப்பு தாவர வகைகள் பல பரவி வருவதோடு ஒருசில அமைப்புக்கள் மற்றும் நபர்களால் நாட்டில் பாதைகளின் இருமருங்கிலும், மயான பூமிகளிலும் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஆகிய பொது இடங்களிலும் நாட்டப்பட்ட அக்கேஷியா போன்ற மரங்களினால் தேன் கூட்டங்களின் இருப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென அந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் தாவர இனங்களைப் போன்றே உயிரினங்களினதும் வாழ்விற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள இவ்வாறான ஆக்கிரமிப்பு தாவர வகைகளினது பரவலை தடுத்து முழுமையாக ஒழிப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 59/ '19

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— பெருந்தோட்டக் கைத்தொழில் துறையை புதிய முறைமையொன்றின் மூலமாக நிர்வகிப்பதற்காக சிறுதோட்ட உரிமையாளர்களாக நியமித்து தொழிலாளர்களுக்கு தோட்டங்களின் உரிமையைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்,— இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில் துறைக்கு நீண்டகால வரலாறு காணப்படுவதுடன், கடந்த 25 வருட காலப்பகுதியினுள் ஒயில் பாம் உட்பட புதிய பயிர்ச்செய்கைகள் பெருந்தோட்டத்துறையில் நுழைந்து இருப்பதுடன் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ள பெருந்தோட்டத்துறையின் திறனற்ற முகாமைத்துவம் காரணமாக இத்துறையானது வீழ்ச்சிக்கு உள்ளாகி தொழிலாளர்களுக்கு கூட நம்பிக்கையுடன் தமது தொழில்களில் ஈடுபடுவதற்கான பொருளாதார சமூகச்சூழலொன்று அங்கு காணப்படாமையினால், எமது நாட்டிலே பிரதான ஏற்றுமதி வருமானத்துறையாகிய பெருந்தோட்டக் கைத்தொழில் துறையை, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள தனியார் மயப்படுத்துகையில் இருந்து அகற்றி அரச தலையீட்டின் கீழ் புதிய முறைமையொன்றின் மூலமாக நிர்வகிப்பதற்காக சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றியமைத்து தொழிலாளர்களுக்கு சிறு தோட்டங்களைப் பகிர்ந்தளித்து அவற்றை நிலைபேறாக நடாத்திச் செல்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 63/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— திரைப்படக் கல்லூரியொன்றைத் தாபித்தல்,— இலங்கையின் திரைப்படக் கைத்தொழிலானது தற்போது 70 ஆண்டுகளைக் கடந்திருப்பதோடு சர்வதேச திரைப்பட விழாக்களை வெற்றிபெறக்கூடிய திறமைமிக்க திரைப்படப் பணிப்பாளர்கள், நடிகர், நடிகைகள் உட்பட படைப்பாளிகளை உருவாக்க இலங்கைக்கு முடிந்துள்ள போதிலும், அது ஒரு பாடமாக எதிர்கால சந்ததியினருக்கு முறைப்படி எடுத்துச்செல்ல எமது நாட்டுக்கு இதுவரை திரைப்படக் கல்லூரியொன்று இல்லாமையினால் தொழில்சார் திரைப்படத் துறையொன்றை உருவாக்கிக்கொள்ளும் நோக்கத்துடன் திரைப்படக் கல்லூரியொன்று துரிதமாக தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 64/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நவீன கலையரங்கமொன்றை தாபித்தல்,— இலங்கையில் Modern Art எனும் நவீன கலைத்துறையில் ஈடுபடுகின்ற கலைஞர்கள் எமது நாட்டில் இருப்பினும் அவர்களின் கலைப்படைப்புகளை காட்சிப்படுத்துவதற்கு நவீன கலையரங்கமொன்று இல்லாதுள்ளமை பாரிய குறைபாடாக உள்ளதுடன் அவ்வாறான கலையரங்கமொன்றின் மூலம் எமது சித்திர மற்றும் சிற்பக்கலை உள்ளிட்ட கலைப்பணிகளுக்கு ஊட்டமளிக்கப்படுவதுடன், சுற்றுலாக் கைத்தொழிலின் முன்னேற்றமும் இடம்பெறுவதால் அவ்வாறான கலையரங்கமொன்றை (Modern Art Gallery) கொழும்பு நகரைச் சார்ந்ததாகத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.65/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— இலத்திரனியல் கழிவுப் பொருட்களை முறையாக வெளியேற்றுதல்,— இலத்திரனியல் கழிவுப் பொருட்களாக அறியப்படுகின்ற ஈ-கழிவுப் பொருட்கள் எமது நாட்டுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி வருவதோடு, இன்றளவில் வருடமொன்றுக்கு சுமார் 92,000 மெற்றிக் தொன் ஈ-கழிவுப் பொருட்கள் பிறப்பிக்கப்படுவதால் 2020 ஆம் ஆண்டளவில் அது 120,000 மெற்றிக் தொன் வரை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதோடு இலத்திரனியல் கழிவு பொருட்கள், அவற்றை வெளியேற்றுதல் மற்றும் அதில் காணப்படும் சுற்றாடல் மற்றும் சுகாதார ரீதியான தீங்குகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டுவதற்கும், இலத்திரனியல் கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதற்காக முறைசார்ந்ததும் தொடர்ச்சியானதுமான வழிமுறையொன்றை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 66/ '19

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— சர்ச்சைக்குரிய "பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிற்றட்" நிறுவனத்தை அரசாங்கத்துக்குச் சுவீகரித்து "மட்டக்களப்பு பல்கலைக்கழகம்" என பெயர் மாற்றம் செய்தல்,— நாட்டில் பெரும் சர்ச்சைக்குரியதாக மாறியுள்ள ஹிரா மன்றத்தினால் தொடங்கப்பட்ட "பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிற்றட்" நிறுவனம் மற்றும் அந் நிறுவனத்தின் மூலம் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இன்றளவில் உயர் கல்வி அமைச்சில் பதிவு செய்வதற்கு அங்கீகாரத்தை பெறும் நோக்கத்துடன் வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனியார் உயர்கல்வி நிறுவனம் சமூகத்தில் கடும் விமர்சனத்தை எதிர்கொண்டுள்ளதோடு இதற்கு காணி வழங்கப்பட்டுள்ள மற்றும் நிதி உதவிகள் கிடைத்துள்ள செயன்முறை உள்ளிட்ட சில செயன்முறைகள் தொடர்பாக எழுந்துள்ள விடயங்களை கருத்தில் கொண்டு ஷரியா பல்கலைக்கழகமாகவும் அறியப்பட்டுள்ள "பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிற்றட்" நிறுவனத்தையும் அதனுடன் தொடர்புடைய சகல கட்டடங்களையும் அரசாங்கத்துக்கு சுவீகரித்து அரச பல்கலைக்கழகமாக மாற்றி அதற்கு "மட்டக்களப்பு பல்கலைக்கழகம்" என பெயரிடப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.67/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பயங்கரவாதிகளுடனும் பயங்கரவாத அமைப்புக்களுடனும் தொடர்புபட்டவர்களுக்கு மரண தண்டனையை வழங்குதல் மற்றும் அவர்களின் மொத்த சொத்துக்களையும் பறிமுதல்செய்தல்,— சர்வதேச அல்லது உள்நாட்டு பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்கள், அத்துடன் பயங்கரவாத அமைப்புகள், செயற்பாட்டாளர்களுடன் நேரடி அல்லது மறைமுகமாக உதவிபுரிகின்ற, துணைபுரிகின்ற, உடந்தையாயிருக்கின்ற ஆட்களின் செயற்பாடுகள் பற்றி நீதிமன்றத்தால் நிரூபிக்கப்பட்டவிடத்து, அவர்களின் சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல்செய்து மரண தண்டனை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 68/ '19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சகல மத்ரஸா பாடசாலைகள் மற்றும் அரபுக் கல்லூரிகள் அனைத்தையும் கல்வி அமைச்சின் கீழ் பொறுப்பேற்றுக் கொள்ளல்,— தற்போது முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற நாட்டிலுள்ள மத்ரஸா பாடசாலைகள் மற்றும் அரபுக் கல்லூரிகள் அனைத்தையும் உடனடியாக கல்வி அமைச்சின் கீழ் பொறுப்பேற்றுக் கொண்டு இந்தப் பாடசாலைகளில் ஒரு பாடமாக சிங்கள வரலாற்றைக் கற்பிப்பதற்கும், அப்பாடசாலைகளை கல்வி அமைச்சின் கீழ் கண்காணிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 69/'19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— இலங்கையில் காணப்படுகின்ற அனைத்துப் பாடசாலைகளையும் மதங்களுக்கமைய மற்றும் இனங்களுக்கமைய வகைப்படுத்தாது கலவன் பாடசாலைகளாக மாற்றியமைத்தல்,— இலங்கையில் காணப்படுகின்ற அனைத்துப் பாடசாலைகளையும் எதிர்வரும் ஆண்டு முதல் படிப்படியாக கலவன் பாடசாலைகளாக மாற்றுவதற்கும் சிங்களம், தமிழ், முஸ்லிம், கத்தோலிக்கம் என்றவாறு பாடசாலைகளைத் தாபிக்க எதிர்காலத்தில் வாய்ப்பளிக்காமல் இருப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு இன அடிப்படையில் குறிப்பிட்ட சதவீதத்தின் கீழ் பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 70/ '19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— இனம் மற்றும் சமய அடிப்படையில் அரசியல் கட்சிகளைப் பெயரிடுவதனைத் தடை செய்தல்,— தற்போது எழுந்துள்ள நிலைமையினை கவனத்திற் கொண்டு இலங்கையில் இனம் மற்றும் சமய அடிப்படையில் அரசியல் கட்சிகளைப் பெயரிடுவதனைத் தடை செய்து தற்போது அவ்வாறு இனத்தினதோ அல்லது சமயத்தினதோ பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசியல் கட்சிகளினது பெயர்களையும் மாற்றம் செய்ய வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 71/'19

கௌரவ திலங்க சுமதிபால,— "பெட்டிக்கலோ கெம்பஸ் பிரைவேற் லிமிற்றெட்" நிறுவனத்தை அரசாங்கம் சுவீகரித்து அரச பாதுகாப்பு பலக்லைக்கழகமாக மாற்றுதல்,— உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இலங்கையின் தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக தோன்றியுள்ள பாரதூரமான நிலைமையின் கீழ் குறிப்பாக பெரும்பான்மை சமுதாயத்தினரின் பாதுகாப்பு தொடர்பான நம்பிக்கையை உறுதிசெய்வதற்காகவும், இலங்கைக்கு எதிர்காலத்தில் அத்தகைய சந்தர்ப்பமொன்று ஏற்படாதிருக்கவும், குறிப்பாக தீவிரவாத கருத்துடையவர்களிடமிருந்து வடக்கு கிழக்கு பிரதேசங்களைப் போன்றே ஒட்டுமொத்த இலங்கையையும் பாதுகாத்துக்கொள்ளவும், "பெட்டிக்கலோ கெம்பஸ் பிரைவேற் லிமிற்றெட்" நிறுவனத்தை பாதுகாப்பு அமைச்சு சுவீகரித்து அரச பாதுகாப்பு பல்கலைக்கழகமொன்றாக மாற்றவேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.72/'19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பண்டுவஸ்னுவர இராசதானியை சுற்றுலாத்திட்டத்தில் உள்ளடக்கி அபிவிருத்தி செய்தல்,— இலங்கையின் பழைமைவாய்ந்த இராசதானியொன்றாகக் கருதப்படுகின்ற பண்டுவஸ்னுவர இராசதானியை சுற்றுலாத் திட்டத்தினுள் உள்ளடக்கி அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.73/'19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரஜைகளின் சுகாதார உரிமையை அரசியலமைப்பில் உள்ளடக்குதல்,— இலங்கையில் சகல பிரஜைகளுக்கும் தாம் பீடிக்கப்படும் நோய் அல்லது முகம் கொடுக்க வேண்டி நேருகின்ற விபத்தின்போது அரசாங்கச் செலவில் இலவசமாக சிகிச்சை பெறுவதற்கான உரிமையினையும், தொற்றுகின்ற அல்லது தொற்றாத நோய்களைத் தவிர்பதற்குத் தேவையான தடுப்பு மற்றும் ஆலோசனைகளைப் போன்றே புனர்வாழ்வளிப்பு சேவைகளை தரமானதாகவும் நியாயமானதாகவும் பெற்றுக்கொள்வதற்கான உரிமையினையும் ஏற்றுக்கொண்டு, இது இலங்கையின் அரசியல் அமைப்பில் உள்வாங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.74/ '19

கௌரவ ரொஷான் ரணசிங்க,— இலங்கைப் பிரஜைகளுக்கு திருமணம் பற்றிய பொதுச் சட்ட விதிகளை உருவாக்குதல்,— இலங்கை வாழும் பல்லின சமூகங்களை பிரிக்கும் வகையிலான சட்டங்கள் நாட்டில் அமுலில் இருப்பதால் அவற்றை சீர் செய்யுமுகமாக குறிப்பாக திருமணச் சட்டம் சகல பிரஜைகளுக்கும் பொதுவான சட்டமாக இருக்க வேண்டுமெனவும், கண்டி திருமணச் சட்டம், முஸ்லிம் திருமணச் சட்டம் என வித்தியாசப்படக் கூடாதெனவும், பிரஜை ஒருவர் ஒரு திருமணத்தை மாத்திரமே செய்துகொள்ள முடியுமெனவும் அதனை 18 வயது பூர்த்தியானதன் பின்னர் செய்துகொள்ள முடியுமென்றவாறு இலங்கை பிரஜைகளுக்கு திருமணம் பற்றி பொதுவான சட்டவிதிகளை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

# 2019 ஒக்டோபர் 22, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

43/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில், வலேபொட, உடகந்த எனும் பெயரில் வயல் வெளியொன்று உள்ளதென்பதை அறிவாரா;

(ii) இந்த வயல் வெளியில் எத்தனை ஏக்கர் வயற் காணிகள் உள்ளன;

(iii) சுமார் 10 ஆண்டுகளாக இந்த வயல் வெளிக்கு நீர் கிடைக்காத காரணத்தினால் தரிசு நிலமாக மாறிவிட்டதை அறிவாரா;

(iv) ஆமெனில், இந்த வயல் வெளியில் பயிரிடுவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

94/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டளவில் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கமைய இன்டபோல் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள புலிகள் இயக்கம் சார்பான இயக்கங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி காலகட்டத்தில் குறிப்பிட்ட பட்டியலில் உள்ளடங்கிய புலிப் பயங்கரவாதிகளின் எண்ணிக்கை மற்றும் பாதாள உலக கோஷ்டி அங்கத்தவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரையில் இன்டபோல் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ள புலிகள் இயக்கம் சார்பான அமைப்புக்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2015 இற்குப் பின்னர் இதுவரையில் இன்டபோல் பட்டியலிருந்து நீக்கப்பட்டுள்ள புலிப் பயங்கரவாதிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி அமைப்புகள் மற்றும் பயங்கரவாதிகளை இன்டபோல் பட்டியலில் இருந்து நீக்குவதற்கான காரணம் யாது;

(iv) மேற்படி நீக்குவதற்காக இலங்கை அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதா;

(v) சர்வதேச ரீதியில் புலிகளுக்கு சார்பானவர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு இந்த நீக்கமானது ஊக்கமளிப்பதாக அமைவதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

154/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை - பண்டாரவளை வீதியில், 2 ஆம் மைல் கல்லின் அருகாமையிலுள்ள பாலம் கடுமையாக சிதைவுற்றுள்ளதை அறிவாரா;

(ii) இப்பாலத்தினூடாக செல்லவேண்டியுள்ள கிராமங்களின் பெயர்கள் யாவை;

(iii) இப்பாலத்தின் பழமை பாதுகாக்கப்படக் கூடியவாறு நவீனமயப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

473/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு.கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக சதித் திட்டம் தீட்டியமைக்கான குற்றச்சாட்டுக்கு உள்ளாகி இருக்கின்ற பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. நாலக்க சில்வா தனது சேவைக் காலத்தில் தவறான நடத்தை அல்லது வேறு ஏதேனும் குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருந்தால் அந்தச் சம்பவம், திகதி, மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று அல்லது ஏனைய சட்டரீதியான நடவடிக்கைகளின் தீர்மானங்கள் மற்றும் அவற்றின் நிழற் பிரதிகளை வழங்குவாரா என்பதையும்;

(ii) பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபராக அவர் ஆற்றிய சேவைகளின் துல்லியமான தன்மை மற்றும் பக்கச்சார்பின்மை பற்றி திருப்தி அடைகின்றாரா என்பதையும்;

(iii) நாட்டின் தலைவருக்கும் பயங்கரவாதத்தை அழித்த பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருக்கும் எதிரான சதித்திட்டம் தொடர்பானதொரு முறைப்பாடு என்பதால் அந்த உத்தியோகத்தரை கட்டாய லீவில் அனுப்புவதின் மூலம் மாத்திரம் நியாயமான விசாரணையொன்று இடம்பெறுமென திருப்தி அடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

503/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 முதல் 2017 வரையில் ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையில் பங்கேற்ற முப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அமைதிப்படை பணிகளுக்காக தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு தற்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விதப்புரை தேவையென பாதுகாப்பு அமைச்சு கட்டளை பிறப்பித்துள்ளதா;

(iii) உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து, ஐக்கிய நாடுகள் சபைக்கு விதப்புரை செய்வதற்கான மிகச் சிறந்த நிறுவனங்கள் காணப்படுகையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதை பொறுப்பளித்ததன் பின்னணி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 முதல் இதுவரையில் முப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களது தடைநீக்கச் சான்றிதழ் வழங்குவதற்காக ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் எண்ணிக்கை மற்றும் தடைநீக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள ஆவணக்கோவைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) தற்போது அமைதிப்படைப் பணிகளில் பங்கேற்போர்களது எண்ணிக்கை விரைவாக குறைந்துள்ளதை அறிவாரா;

(iii) இதற்கான காரணம் யாது;

(iv) 2018 மார்ச் மாதத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள 400 ஆவணக்கோவைகளில் இதுவரையில் 07 ஆவணக் கோவைகளுக்கு மாத்திரமே தடைநீக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளமையை அவர் அறிவாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

544/ ’19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை புடவைக் கைத்தொழில் கூட்டுத்தாபத்திற்கு உரித்தானதாகக் காணப்பட்ட துல்ஹிரிய புடவைத் தொழில்சாலை முதலில் பொம்பே ரெக்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்பதையும்;

(ii) பின்னர் மேற்படி கம்பனியினால் இது கொரியக் கம்பனியொன்றான காபூல் லங்கா நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்பதையும்;

(iii) காபூல் லங்கா கம்பனியினால் இது வாஸ் கோல்டன் நிறுவனத்திடம் பொறுப்பளிக்கப்பட்ட போது ஊழியர்களுக்கு பணிக்கொடை மற்றும் நட்டஈடு செலுத்தப்பட்டது என்பதையும்;

(iv) இவ்வனைத்து சந்தர்ப்பங்களிலும் நிறுவனம் விற்பனை செய்யப்பட்டிருப்பது ஊழியர்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் உட்படவாகும் என்பதையும்;

(v) அச்சந்தர்ப்பத்தில் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் வசித்துவந்த ஊழியர்களுக்கு, எந்தவொரு தொகையும் செலுத்தப்படவில்லை என்பதையும்;

(vi) இலங்கை முதலீட்டுச் சபை தற்போது இந்த வாசஸ்தலங்களில் வசித்துவருகின்ற ஆட்களை அகற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சேவையிலிருந்து ஓய்வுபெறும் போது அல்லது சேவையிலிருந்து நீக்கும் போது இந்த ஊழியர்களுக்குச் செலுத்தப்படாத பணிக்கொடை மற்றும் நட்டஈட்டைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் சுமார் 40 வருடங்கள் வசித்துவருகின்ற ஆட்களை மேற்படி வாசஸ்தலங்களிலிருந்து வெளியேற்றும் முயற்சியைத் தடுத்து வாசஸ்தலங்களின் உரித்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

604/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பொதுமக்களுக்கான உதவு தொகை வழங்கப்படுவது எதுவித வருமானமுமற்ற நோயாளர்களுக்கா அல்லது அங்கவீனமுற்ற நிலையில் காணப்படுகின்ற நபர்களுக்கா அல்லது குடும்பங்களுக்கா என்பதனை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எஹெலியகொடை பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 143 பீ நுகதண்ட கிராம சேவகர் பிரிவில் 23 நபர்களுக்கு பொது மக்களுக்கான உதவி தொகை வழங்கப்படுகின்றதென்பதையும், அவர்களுக்கு மத்தியில் 5 பேருக்கு மாதாந்தம் 300/- ரூபாய் வீதமும், ஏனையோருக்கு 250/- ரூபாய் வீதமும் வழங்கப்படுகின்றதென்பதையும் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட தொகையானது அக்குடும்பங்களுக்கு ஒரு நாள் செலவினத்திற்குக்கூட போதுமானதல்ல என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இந்த உதவியற்ற குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற பெயரளவிலான கொடுப்பனவுக்குப் பதிலாக 1000/- ரூபாவிலான கொடுப்பனவினையேனும் பெற்றுக்கொடுப்பதற்கு உடன்படுபாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

831/ '19

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த 8 வருடங்களாக பயன்பாட்டிலுள்ள சி.ரி ஸ்கேனர் இயந்திரமானது செயலிழந்துள்ளது என்பதையும்;

(ii) மேற்சொல்லப்பட்ட காரணத்தினால் உரிய நோயாளர்கள் வவுனியா மற்றும் இதர வைத்தியசாலைகளுக்கு பாரிய சிரமங்களுக்கு மத்தியில் கொண்டு செல்லப்பட வேண்டியுள்ளதென்பதையும்;

(iii) சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது புதிய சி.ரி ஸ்கேனர் இயந்திரமொன்றை வழங்குவதற்கு உறுதியளித்திருந்தது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு புதிய சி.ரி ஸ்கேனர் இயந்திரம் ஒன்றை வழங்குவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதனையும்;

(ii) ஆமெனில், எத்தினத்தில் இது வழங்கப்படுமென்பதனையும்;

(iii) தற்போது செயலிழந்துள்ள சி.ரி ஸ்கேனர் இயந்திரத்தைத் திருத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாவென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

858/ '19

கௌரவ கனக ஹேரத்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்துச் சபைக்காக 2200 புதிய பஸ் வண்டிகள் கொண்டுவரப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இந்த பஸ் வண்டிகள் குத்தகை அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி குத்தகையை செலுத்துதல் நிறுத்துப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

918/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக செலவாகிய பணத்தொகை எவ்வளவு;

(ii) மேற்படி பணத்தொகையை பெற்றுக்கொண்ட தோற்றுவாய்கள் யாவை;

(iii) துறைமுகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நாள்முதல் இற்றைவரை அத்துறைமுகத்திற்கு வந்த கப்பல்களின் எண்ணிக்கை, அக்கப்பல்களின் பெயர்கள் மற்றும் தரையிறக்கிய கொள்கலன்களின் எண்ணிக்கை மாதாந்தம் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) அக்காலப்பகுதிக்குள் துறைமுகத்தின் வருமானம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் வெவ்வேறாக எவ்வளவு;

(v) அம்பாந்தோட்டை துறைமுகத்தை பிராந்தியத்தின் முன்னேற்றமடைந்த துறைமுகமாக மாற்றுதல் தொடர்பிலான நல்லாட்சி அரசாங்கத்தின் நோக்கு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1009/ ' 19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 ஏப்ரல் மாதத்தில், இலங்கை விமானப் படையினால் ரேடார் ரிசீவரொன்றும் அன்டெனா ஸ்கேனரொன்றும் பழுதுபார்ப்பதற்காக சீனாவுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும், அப் பொருட்கள் காணாமல் போயுள்ளதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) அப்பொருட்களை ஏற்றி இறக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அந்நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) அந் நிறுவனம் இன்னும் இலங்கையின் யாதேனுமொரு அரச நிறுவனத்துக்கு சேவைகளை வழங்குகின்றதா என்பதையும்;

(v) அப்பொருட்கள் காணாமல் போனதால் ஏற்பட்ட இழப்பு எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1027/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நிதி அமைச்சரினால் “100 நாள் புரட்சி” பற்றிய பிரகடனத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டவாறு விவசாயிகளால் வர்த்தக வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியுள்ள ரூபா 100,000/- வரையிலான கடன் மூலதனத்திலிருந்து 50% வீதம் வெட்டப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) விவசாயக் கடன்கள் வெட்டிவிடப்பட்டதன் விளைவாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினச் சுமையின் அளவு யாதென்பதையும்;

(iii) கடன் வெட்டிவிடப்பட்ட விவசாயிகளின் பெயர்ப் பட்டியலையும் மேற்படி ஒவ்வொரு விவசாயினது பெயருக்கு முன்னாலும் வெட்டிவிடப்பட்ட கடனின் தொகை குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆவணத்தையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) விவசாயிகளின் வெட்டிவிடப்பட்ட கடன் சார்பாக வர்த்தக வங்கிகளுக்கு அரசாங்கத்தினால் இதுவரை செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1049/ '19

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது சுகாதார கள உத்தியோகத்தர்களை நடுத்தர மட்டத்திலான தொழில்நுட்ப சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வது தொடர்பில் வெளியிடப்பட்ட 22/2002 சுற்றறிக்கைக்கு அமைய சப்பிரகமுவ மாகாண சுகாதார அலுவலர்கள் அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ளாதிருப்பது ஏன் என்பதையும்;

(ii) சப்பிரகமுவ மாகாண ஆளுநரின் கட்டளைக்கு அமைய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொள்ளாதிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஆளுநரின் பணிப்புரையை மூன்று சந்தர்ப்பங்களில் புறக்கணித்துள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி பொது சுகாதார கள உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை யாது என்பதையும்;

(v) எதிர்காலத்தில் மேற்படி தொகையைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1071/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2019.03.27 அல்லது அதற்கு அண்மித்த தினமொன்றில் டேயிலி நியூஸ் செய்தித்தாளில் பிரசுரமாகிய அறிவித்தலில்,

(i) 2018.12.31 ஆம் திகதி முதல் பிரதேச அபிவிருத்தி வங்கியால் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும்;

(ii) 2019.04.01 ஆம் திகதி முதல் அவ்வங்கியின் அனைத்து வங்கி நடவடிக்கைகளும் பிரதேச அபிவிருத்தி வங்கி மூலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்;

(iii) கையகப்படுத்தல் நடவடிக்கைக்கு 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 76(J)(1) பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கி அதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகவும்;

குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி அறிவித்தலை பிரசுரிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் அனுமதி வழங்கப்பட்டதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இந்த கையகப்படுத்தல் நடவடிக்கைக்கு,

(i) லங்காபுத்ர அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையின்;

(ii) லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தின்;

(iii) கம்பெனிகள் பதிவாளரின்;

(iv) நிதி அமைச்சரின்;

(v) பாராளுமன்றத்தின்;

அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதனை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) பிரதேச அபிவிருத்தி வங்கியின் பங்குதாரர்கள் மற்றும் அவர்களது பங்குகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1134/ '19

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்களின் போது உள்நாட்டு களிமண் கூரை ஓடுகளின் உற்பத்தியாளர்களுக்கு கூரை ஓடுகளை வழங்குவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காது போயுள்ளது என்பதனையும்;

(ii) இதன் காரணமாக 100% சுகாதாரத்திற்கு சாதகமான உள்நாட்டு கூரை ஓடுகள் உற்பத்தியானது சீரழிந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்களின் போது உள்நாட்டு களிமண் கூரை ஓடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதனை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2019 ஒக்டோபர் 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

52/ '18

கௌரவ ஹேஷான் விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் புரநெகும கருத்திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் செயற்பட்டு வரும் பிள்ளை பராமரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இவற்றிற்கென செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களின் தரத்தை உயர்த்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

99/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டில் காணப்படும் குற்றச்செயல்களை தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் கொலை செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் படி யாது;

(ii) மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொலை செய்யப்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுவாரா;

(iii) அவர்களது மனைவி பிள்ளைகளுக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகளின் பெறுமதியைக் குறிப்பிடுவாரா;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களது மனைவி, பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) அவர்களது விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான கொடுப்பனவுகள் உரிய வகையில் செலுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொலை செய்யப்பட்டதன் பின்னர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) கொலை செய்யப்பட்டதன் பின்னர் பதவி உயர்வு வழங்கப்படாத பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) கொலை செய்யப்பட்டதன் பின்னர் பதவி உயர்வு வழங்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறு பதவி உயர்வு வழங்காமைக்கான காரணம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குற்றச்செயல் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் உயிர் பாதுகாப்பு மற்றும் அவர்களது மனைவி பிள்ளைகளது பாதுகாப்பு தொடர்பில் தற்போது காணப்படும் செயன்முறையை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுமா;

(ii) ஆமெனில், இது மேற்கொள்ளப்படும் காலகட்டம் மற்றும் எதிர்பார்க்கப்படும் செயன்முறையினை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

165/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்களில் அநேகமானவர்களுக்கு நிலுவைச் சம்பளம் செலுத்த வேண்டியுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி ஆசிரியர்களுக்குரிய நிலுவைச் சம்பளத்தைச் செலுத்துவதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

368/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கொலபதன தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர் களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

497/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில்முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.12.31 ஆம் திகதியன்று மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய மனித வலு மதிப்பீடு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம், கடமையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையை ஒவ்வொரு பதவிக்கும் ஏற்ப வெவ்வேறாக குறிப்பிடுவாரா;

(iii) 2015 ஜனவரி முதல் இன்று வரையில், நிறுவனத்துக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள நிரந்தர, அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) ஆட்சேர்ப்பு நடைமுறைக்குக்குப் புறம்பாக ஆட்சேர்க்கப்பட்டவர்களும் இவர்களிடையே உள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(v) மேற்படி ஆட்சேர்ப்புக்கள் மற்றும் அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

559/ '19

கௌரவ சி. சிறீதரன்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் இயங்குகின்ற அரச வங்கிகள், தனியார் வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் நுண்நிதிக் கம்பனிகள் மாவட்டரீதியாக எத்தனை;

(ii) அவற்றின் பெயர்கள்;

(iii) பொதுமக்களுக்குக் கடன் வழங்குகையில், தனியார் வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் நுண்நிதிக் கம்பனிகளால் தனித்தனியாக அறவிடப்படும் வட்டி வீதங்கள்;

ஆகியவற்றை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வட மற்றும் கிழக்கு மாகாணங்களில் இயங்கும் நுண்நிதிக் கம்பனிகளின் நியாயமற்ற நடைமுறைகளால் இழைக்கப்பட்ட அநீதிகள் காரணமாக அதிகளவிலான உயரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா;

(ii) எதிர்காலத்தில் அத்தகைய உயிரிழப்புக்கள் ஏற்படாது தடுக்குமுகமாக மேற்படி நுண்நிதிக் கம்பனிகளின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடுமா;

(iii) யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது பொருளாதார இயலுமைகளை இழந்துள்ள வட மற்றும் கிழக்கு மாகாண மக்களை இலக்கு வைத்து நுண்நிதிக் கம்பனிகள் அவர்களது செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கான நோக்கம் என்ன;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

670/ '18

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார், மடுப் பிரதேச செயலாளர் பிரிவில் வலையன்கட்டு கிராமத்தில் மீள்குடியேறிய மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில், அரச சார்பற்ற நிறுவனமொன்றின் உதவியுடன் பல மில்லியன் ரூபா செலவில் குடிநீர் விநியோகத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது என்பதையும்;

(ii) இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட இத்திட்டம் முழுமைப்படுத்தப்படாமல், அரைகுறையாகக் கைவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இக்கிராம மக்கள் தங்களது குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மிகவும் சிரமப்படுகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி குடிநீர் விநியோகத் திட்டத்தை முழுமைப்படுத்தி வலையன்கட்டு கிராம மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) இல்லையெனில் அதற்குக் காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

698/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் அல்லது அரச கம்பனிகளில் பணிப்பாளர் பதவியை அல்லது முகாமைத்துவச் சபை அங்கத்தவர் பதவியை வகிக்கும் இலங்கைப் பிரசை அல்லாத ஆட்கள் யாவர் என்பதையும்;

(ii) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் அல்லது அரச கம்பனிகளில் பணிப்பாளர் பதவியை அல்லது முகாமைத்துவச் சபை அங்கத்தவர் பதவியை வகிக்கும் இரட்டை பிரசாவுரிமையுடைய ஆட்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

763/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய பர்பச்சுவல் டிரஷரீஸ் நிறுவனம் செலான் வங்கியில் பேணிவருவதாக கூறப்படும் மென்டிஸ் கம்பனியின் கணக்கின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் உட்பட சிலருக்கு பணம் வழங்கப்பட்டதாக நிதமும் ஊடகங்களின் செய்திகள் வெளியாவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதற்கு அமைவாக, பர்பச்சுவல் டிரெஸரீஸ் நிறுவனம், மென்டிஸ் கம்பனியின் பெயரில் செலான் வங்கியில் பேணிவரும் கணக்கிற்கு 2015.01.01 தொடக்கம் 2018.01.01 வரை வைப்பிலிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இத்தொகை வைப்பிலிடப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் இவ்வாறு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வைப்பிலிடப்பட்ட தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) 2015.01.01 தொடக்கம் 2018.01.01 வரையான காலத்தில் மென்டிஸ் கம்பனியின் கணக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள திகதி, ஒவ்வொரு திகதியில் விடுவிக்கப்பட்டுள்ள தொகையின் அளவு மற்றும் இப்பணம் செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

844/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கை மத்திய வங்கியின்கீழ் பதிவுசெய்துள்ள நிதிக் கம்பெனிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் மற்றும் பணிப்பாளர் சபை யாது;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்க வந்த நாள் முதல் நிதி நெருக்கடிகளுக்கு இலக்காகிய நிதிக் கம்பெனிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) அவ்வொவ்வொரு நிதிக் கம்பெனியிலும் வைப்புகளை பேணிவந்துள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது ;

(v) அந்நிதிக் கம்பெனிகளின் வைப்பாளர்களுக்கு நீதியை நிலைநாட்ட இற்றைவரை மேற்கொண்ட மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வழிமுறைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

870/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.பீ கருணாரத்ன என்பவர் உள்ளிட்ட மேலும் 17 பேருக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஓய்வூதியம் செலுத்துகையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பயும்;

(ii) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொது மனுக்கள் பற்றிய குழு ஆகியவற்றின் சிபாரிசுகளையேனும் அப்போதைய நிதி, வெகுசன ஊடக அமைச்சு நடைமுறைப்படுத்தவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பொது மக்கள் மனுக்குழுவினால் நடாத்தப்பட்ட விசாரணையில் அப்போதைய நிதி, வெகுசன ஊடக அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஓய்வூதியம் வழங்குவதற்கு இணங்கியுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) சனாதிபதியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ள சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்,-

(iii) மேற்படி நபர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,-

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

902/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வறட்சி நிவாரணம் வழங்கும் பொருட்டு வெளியிடப்பட்ட NDRSC/2018/03 சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்தியின் படி பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் கள உத்தியோகத்தர்கள் மூவரைக் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை, திகதிகள், நேரங்கள், இடங்கள், சமுகமளிப்பு, நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் கலந்துரையாடல் குறிப்புக்கள் என்பவற்றை சமர்ப்பிப்பார;

(iii) எந்தவொரு பயனாளியும் இல்லையென குழு ஏகமனதாக பரிந்துரை செய்துள்ளதா;

(iv) அந்த பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பாரா;

என்பதனை அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) இதற்கமைவாக பிரதேச செயலாளரின் தலைமையில் உரிய அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று கூடியுள்ளதா;

(ii) ஆமெனில், அக்கூட்டங்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பாரா;

(iii) எந்தவொரு பயனாளியும் இல்லையென குழு ஏகமனதாக பரிந்துரை செய்துள்ளதா;

(iv) அந்த பரிந்துரைகளை சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2018 வறட்சி நிவாரணம் படிமுறை II ஐ நடைமுறைப்படுத்துகின்ற போது பொல்பித்திகம பிரதேச மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதனை ஏற்றுக்கொள்வாரா;

(ii) அதனைத் நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாது;

(iii) உரிய நிவாரணங்கள் மக்களுக்கு வழங்கப்படுமா;

(iv) குற்றவாளிகளுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாது;

என்பதனை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

980/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரையான புகையிரதப் பாதையில் கலாவெவ புகையிரத நிலையம் பெரும் எண்ணிக்கையிலான பயணிகள் பயன்படுத்துகின்ற ஒரு புகையிரத நிலையம் என்பதையும்;

(ii) பயணிகளுக்கு புகையிரத நிலையத்திலிருந்து பிரதான வீதிக்கு பிரவேசிப்பதற்குள்ள சுமார் 300 மீற்றர் நீளமான வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றதென்பதையும்;

(iii) இக் காரணத்தினால் புகையிரதப் பயணிகள் அவ் வீதியை பயன்படுத்தாமல் ஆபத்தான முறையில் புகையிரத மேடையிலிருந்து புகையிரதப் பாதை ஊடாக பயணித்து பிரதான வீதிக்கு பிரவேசிக்கையில் விபத்துக்கள் நேரக்கூடும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சுமார் 300 மீற்றர் தூர இக் குறும் வீதியை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1135/ '19

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நேரடியாக அல்லது மறைமுகமாக இலட்சக் கணக்கான மக்களது ஜீவனோபாய மார்க்கமாக, அதேவேளை 100% உள்நாட்டுக் கைத்தொழில் துறையாக விளங்குகின்ற கூரை ஓட்டுக் கைத்தொழில்துறையை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழில் துறையானது பாரிய வீழ்ச்சியை அடைந்துள்ளமையை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழில் துறையின் வீழ்ச்சியுடன் உள்நாட்டுக் கைத்தொழில் துறையைச் சார்ந்த களிமண் கூரை ஓடுகளின் உற்பத்தியாளர்களும் அந்த நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களும் எதிர்நோக்க நேரிடுகின்ற தலைவிதி யாதென்பதையும்;

(iv) அஸ்பஸ்டோஸ் கூரைத்தகடு உற்பத்தியில் ஈடுபடும் பல்தேசிய கம்பனிகளுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்பட்டு அரச நிறுவனங்களுக்கென அஸ்பஸ்டோஸ் கூரைத் தகடுகள் கொள்வனவு செய்யப்படுவதனை அவர் அறிவாரா என்பதையும்;

(v) உள்நாட்டுக் களிமண் கூரை ஓடுகள் உற்பத்தியாளர்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்டுள்ள அரச அனுசரணைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1138/ '19

கௌரவ கனக ஹேரத்,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழில் துறையில் கடந்த 5 வருட காலப்பகுதியினுள் இலங்கை பெற்றுக்கொண்ட வருமானம் ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மீன் உற்பத்தி ஏற்றுமதி மூலமாக கடந்த 5 வருட காலப்பகுதியினுள் இலங்கை பெற்றுக்கொண்ட வருமானம் ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் கடற்றொழில் துறையின் உற்பத்திகள் இந்நாட்டு நுகர்விற்கு போதுமானதாக இல்லையா என்பதையும்;

(ii) இலங்கையில் மீன் உற்பத்திகள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கென வருடாந்தம் செய்யப்படுகின்ற செலவு யாதென்பதையும்;

(iv) மீன் உற்பத்திகள் இறக்குமதி மூலமாக இந்நாட்டு கடற்றொழில் துறையானது பின்னடைவுக்கு இலக்காக மாட்டாதா என்பதையும்;

(v) கடலால் சூழப்பட்டதொரு தீவாகிய எமது நாட்டில் கடற்றொழில் துறையை பாரிய அளவில் முன்னேற்றக்கூடியதாக இருக்கின்ற போதிலும் அவ்வாறு செய்யாதிருப்பது ஏனென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2019 ஒக்டோபர் 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

57/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் லியன்கஹவெல, 7 ஆம் மைல்கல், கடை வீதி என்ற பெயரில் மிகப் பழைமைவாய்ந்ததொரு இடம் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி இடம் கடந்த பல வருடங்களில் பிரதேச சபையினால் முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) பிரதேச சபை ஊடாக இந்த இடத்தை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

100/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டில் காணப்படும் குற்றச்செயல்களைக் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில் 2015 ஆம் ஆண்டு முதல் உபாதைகளுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் படி யாது;

(ii) மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்களில் முழுமையாக வலது குறைந்த நிலைக்கு ஆளாகியுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் அளவு யாது;

(iv) கொடுப்பனவுகள் செலுத்தப்படாதுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(v) அவர்களுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படாமைக்கான காரணம் யாது;

(vi) முழுமையாக வலது குறைந்த நிலைக்கு ஆளாகியுள்ள உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகள் உரிய முறையில் வழங்கப்படுகின்றனவா;

(vii) மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படாதுள்ள முழுமையாக வலது குறைந்த நிலைக்கு ஆளாகியுள்ள உத்தியோகத்தர்கள் காணப்படுகிறார்களா;

(viii) ஆமெனில், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படாமைக்கான காரணம் யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

166/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆந் திகதிய அபெ/15/0180/6/3/008 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்துக்கமைய அமைச்சரொருவருக்கு நியமிக்கக்கூடிய ஆலோசகர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இருப்பினும், ஊவா மாகாண ஆளுநரினால் ஊவா மாகாண முதலமைச்சருக்கு 07 ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆலோசகர் நியமனம் தொடர்பாக தெளிவான அமைச்சரவை தீர்மானமொன்று இருக்கையில், அதனை கவனத்தில் கொள்ளாது ஊவா மாகாண முதலமைச்சருக்கு 07 ஆலோசகர்கள் எந்த சட்ட ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்பட்டார்கள் என்பதையும்;

(iv) இது தொடர்பாக கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கமைய சீராக்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

423/ '19

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி தொல்பொருளியல் இடம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி தொல்பொருளியல் இடம் பற்றிய தொல்பொருளியல் மதிப்பாய்வுகள் அல்லது முற்றாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(iii) இதுவரை கிடைத்துள்ள தொல்பொருளியல் சார்ந்த விடயங்கள் யாவை;

(iv) அது பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(v) இந்த தொல்பொருளியல் இடத்தின் அழிவுக்கு ஏதுவாக அமையத்தக்க வகையில் அதற்குச் சொந்தமான காணிகளில் எவரேனும் வெளித்தரப்பினர் குடியமர்ந்துள்ளனரா;

(vi) அதற்கிணங்க மேற்படி தொல்பொருளியல் இடத்திற்கு நேர்ந்துள்ள சேதம் பற்றிய முழுமையான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பாரா;

(vii) இன்றளவில் இந்த தொல்பொருளியல் இடத்தை பாதுகாக்க மேற்கொண்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

780/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) 1989.09.11 ஆம் திகதி தேயிலை சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் உதவி முகாமையாளராக (கருத்திட்டம்) நியமனம்பெற்ற உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி பதவியில் கடமைகளைப் பொறுப்பேற்ற உத்தியோகத்தரொருவர், குறிப்பிட்ட பதவிக்கு உரித்தான, 1989 செத்தெம்பர் மாதத்துக்கான சம்பளத்திற்கு மேலதிகமாக, பிறிதோர் அரச நிறுவனத்திடமிருந்தும் குறிப்பிட்ட மாதத்துக்கான சம்பளத்தை பெற்றுள்ளாரென்பதை அறிவாரா;

(iii) மேற்படி உத்தியோகத்தருக்கு அரசியல் தேவையின்பேரில் வழங்கப்பட்டிருந்த உதவிப் பொதுமுகாமையாளர் (சேவைகள்) பதவியானது 2007.06.19 ஆம் திகதி முதல் நீதிமன்ற தீர்ப்பினால் இரத்துச் செய்யப்பட்டு அவர் முன்பு வகித்த பதவிக்கு, அதாவது உதவிக் கருத்திட்ட முகாமையாளர் (தரம் vi) பதவிக்கு நியமிக்கப்பட்டமையை அறிவாரா;

(iv) இதற்கேற்ப, 2007.06.19 ஆம் திகதி முதல் 2015 இறுதி வரையில் பதவிக்கு உரித்தல்லாத சம்பளம் மற்றும் கொடுப்பனவாக குறிப்பிட்ட உத்தியோகத்தர் பெற்றுக்கொண்டுள்ள பணத்தொகை யாது;

(v) மேற்படி பணத்தொகையை மீள்அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

817/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் கல்வி வலயம் 5 இல் "அருகிலுள்ள பாடசாலை - மிகச்சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விருத்தி செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள பாடசாலைகள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையிலும் முன்மொழியப்பட்டுள்ள விருத்திசெய்தல்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையையும் விருத்திசெய்ய வழங்கப்படுகின்ற குறைந்தபட்சத் தொகை யாது;

(iv) அப்பாடசாலைகளில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் மற்றும் அவற்றுக்காக செலவிட்டுள்ள தொகைகள் யாவை;

(v) திருகோணமலை போன்ற கஷ்டப் பிரதேசங்களுக்கு ஆசிரியர்கள் வருகைதராமைக்கு ஆசிரியர் குடிமனைகளின் பற்றாக்குறை தீவிரமான தாக்கமேற்படுத்தி உள்ளதால் அத்தகைய சிக்கல்களை தீர்த்துவைக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

827/ '19

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் அறக்கொட்டியா (பீடை) தாக்கம் காரணமாகத் தற்போது நெல் பயிரிடப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும்;

(ii) அறுவடை அண்மித்துள்ள காலத்தில், மேற்படி தாக்கம் காரணமாக விவசாயிகள் அதிக பாதிப்பிற்குள்ளாகியுள்ளதாலும்;

(iii) அறக்கொட்டியா தாக்கம் ஏனைய பிரதேசங்களிலும் பரவியுள்ளதாகவும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அறக்கொட்டியா நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) அறக்கொட்டியா நோய் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு நட்டஈடொன்றை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா;

(iii) தற்போது படைப் புழு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை நட்டத்திற்காக நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

846/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு வருடந்தோறும் ஈட்டிய வருமானம் மற்றும் செலவிட்ட பணத்தொகை ஒவ்வொரு வருடத்திற்கிணங்கவும் தனித்தனியாக எவ்வளவு;

(ii) அக்காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பதவிப் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி காலப்பகுதிக்குள் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பில் சுதந்திரமான ஊடக கலையை உருவாக்குவதற்காக மேற்கொண்ட வழிமுறைகள் யாவை;

(iv) சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பில் குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை குறிப்பிடுவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

871/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்ற நிறுவனம் உள்ளிட்ட மேலும் பல நிறுவனங்களின் தோட்டங்களில் இறப்பர் மரத் தண்டின் மீது வாயு கவசமொன்றை பொருத்தியும் இரசாயனப் பொருட்களை பூசியும் இறப்பர் பால் பெறப்படுகின்றது என்பதையும்;

(ii) இவ்வாறு இறப்பர் பால் பெறக்கூடிய காலம் துரிதமாக முடிவடைந்த பின்னர் அம் மரங்களை அறுத்து பசை உற்பத்தி செய்து இதர கைத்தொழில்களுக்கு பயன்படுத்துவதே இதன் நிர்வாகிகளின் திட்டமென்பதையும்;

(iii) இவ்வாறு இறப்பர் மரங்களை தறித்து அப்புறப்படுத்தப்பட்ட காணிகளில் தால விருட்ச செய்கையினை மேற்கொள்வதே நிர்வாகிகள் திட்டமிட்டுள்ளனர் என்பதையும்;

(iv) இச் செயற்பாடு அதன் ஊழியர்களின் தொழில்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளதோடு சுற்றுப்புறச்சூழலுக்குச் செய்யும் பெரும் அழிவாக அமையும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந் நிலைமையினை கட்டுப்படுத்துவதற்கு தாமதமின்றி தலையீடு செய்வாரா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

948/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி பிரதான புகையிரத நிலையத்திலிருந்து மாத்தறையை நோக்கி அமைந்துள்ள கரையோர புகையிரத வீதி இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நவீனமயப்படுத்தலின்போது காலி தலாப்பிட்டிய, பண்டாரநாயக்க பிளேஸ் மற்றும் தக்கியா ஒழுங்கைக்கு இடையில் புகையிரத வீதி ஒதுக்கத்தின் எல்லைக்கு அருகிலுள்ள வீடுகளுக்கும் காணிகளுக்கும் செல்வதற்கான ஒரேயொரு பிரவேச வீதி புகையிரத வீதியால் முழுமையாக மூடப்பட்டு நடைபாதையாக மாறியுள்ளதால், அங்குள்ள குடியிருப்பாளர்களுக்கு போக்குவரத்துச் செய்வதற்குத் தகுந்த பிரவேச வீதி இல்லாத நிலை உருவாகி உள்ளதென்பதையும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த குடியிருப்பாளர்களின் அடிப்படைத் தேவையாகக் காணப்படும் பாதுகாப்பான பிரவேச வீதியொன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

981/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமத்திய மாகாணத்தின் பிரதான நகரான அநுராதபுரம் நகருக்கு நிகராக, நாளாந்தம் பெருந்தொகையான மக்கள் நாட்டின் பல்வேறுபட்ட திசைகளுக்கு பயணிக்கும் கேந்திர நிலையமாக தபுத்தேகம நகரம் அமைந்துள்ளது என்பதையும்;

(ii) பெருந்தொகையான குடும்பங்கள் இந்த நகரத்தை அண்மித்து வாழ்கிறார்கள் என்பதையும்;

(iii) இந்நகரம் தபுள்ளை பொருளாதார நிலையத்துக்கு நிகரான வர்த்தக பொருளாதார நிலையம் அமைந்துள்ளதொரு நகரம் என்பதையும்;

(iv) தபுத்தேகம நகரின் பொது பஸ்தரிப்பிடம் பொதுமக்களுக்கு பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நாளாந்தம் பெருந்தொகையான பஸ்பயணிகள் நடமாடும் பஸ்தரிப்பிடத்தில் பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உகந்த மலசலகூட முறைமை காணப்படாதுள்ளமை;

(ii) பயணிகளுக்கு உரிய பாதுகாப்புடனான நிழற்குடை காணப்படாதுள்ளமை;

(iii) மழை காலத்தில் பஸ்தரிப்பிட நிலப்பகுதியில் நீர் தேங்கி நிற்பதனால் பயணிகள் அசௌகரியத்துக்கு உட்படும் விடயங்கள் தொடர்பில் இதுவரையில் கவனம் செலுத்தப்படாதுள்ளமை;

என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

(ii) மேற்படி பஸ்தரிப்பிடத்தை பயணிகளுக்கு சிறந்த சேவையை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தயார் செய்து வழங்கும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1031/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 245 இன் படி, கொழும்பு புதிய நகர மண்டபத்திற்கு அருகில் 7000 இருக்கைகளைக் கொண்ட மாநாட்டு மண்டபமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3000 மில்லியன் பன்படுத்தப்பட்ட விதம் தொடர்பான விபரமான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி கருத்திட்டத்தில் கூட்டுச்சேரும் தனியார் துறை முதலீட்டாளர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்குப் பிரதிபலிப்புக் காட்டிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பெயர் பட்டியல் ஒன்றையும் இவர்களது முதலீடுகளின் பெறுமதிகள் அடங்கிய அட்டவணை ஒன்றையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1079/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த அனைவரினதும் பெயர் மற்றும் முகவரிகளை குறிப்பிடுவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நட்டஈடு மற்றும் கொடைகள் தனித்தனியே குறிப்பிடுவாரா என்பதையும்;

(iii) மேற்படி தாக்குதலில் உயிரிழந்துள்ள ஆட்களின் தங்கிவாழ்வோருக்கு நீண்டகால அடிப்படையில் பெற்றுக் கொடுக்க உத்தேசித்துள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(iv) தாக்குதலில் காயமடைந்து, நீண்டகால சிகிச்சை அவசியமாகின்ற ஆட்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) அவ்வாறு இனங்காணப்பட்டுள்ள ஆட்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படுகின்ற மருத்துவ மற்றும் ஏனைய உதவிகள் யாவை என்பதையும்;

(vi) தாக்குதல் காரணமாக பூரணமாக உபாதைகளுக்கு ஆளானவர்களுக்கான விசேட உதவி வேலைத்திட்டமொன்று இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1136/ '19

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கட்டான கல்வி வலயத்தில் "அண்மையிலுள்ள பாடசாலை - சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) "அண்மையிலுள்ள பாடசாலை - சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கட்டான கல்விக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மத்தியில் அடிக்கல் மாத்திரம் நடப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படாத பாடசாலைகள் உள்ளனவென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) அடிக்கல் மாத்திரம் நடப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படாத பாடசாலைகளில் அப்பணிகளை நிறைவு செய்யும் சரியான காலப்பகுதியை குறிப்பிடுவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1139/ '19

கௌரவ கனக ஹேரத்,— பிரதம அமைச்சரும் தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குரிய நிலப்பிரதேசத்திலும் கடல் எல்லைக்குள்ளும் பெற்றோலிய வளம் அல்லது இயற்கை வாயு காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) அது தொடர்பான முற்றாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கம்பெனிகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி முற்றாய்வு நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) பெற்றோலிய படிவுகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட சில வெளிநாட்டுக் கம்பெனிகள், மேற்படி முற்றாய்வு நடவடிக்கைகளை இடையில் கைவிட்டுச் சென்றுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2019 ஒக்டோபர் 25, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

59/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வாறு அகற்றப்பட்ட புகையிரதப் பெட்டிகளுள் திருத்திமைத்து ஓட்டத்தில் இணைக்கப்பட்ட புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அந்த புகையிரதப் பெட்டிகளை திருத்தியமைத்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) அதற்கென செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(v) ஓட்டப்படுவதிலிருந்து அகற்றப்பட்ட ஏனைய புகையிரத பெட்டிகளை மீளவும் ஓட்டத்தில் இணைப்பதற்கான அமைச்சின் வேலைத்திட்டத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

101/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.12.31 ஆம் திகதியளவில் நீதிமன்றங்களில் தீர்க்கப்படாது உள்ள வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையை நீதிமன்ற வகைப்படுத்தல்களுக்கமைய வெவ்வேறாக குறிப்பிடுவாரா என்பதையும்;

(iii) 5 வருடகாலத்துக்கும் அதிகமாக தீர்க்கப்படாதுள்ள வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 10 வருடங்களுக்கும் அதிகமாக தீர்க்கப்படாதுள்ள வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மிக இலகுவாக தீர்க்கப்பட முடியுமெனினும், நீண்ட காலத்தில் தீர்க்கப்படாதுள்ள வழக்குகளை விரைவில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(vi) ஆமெனில், இதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

167/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.01.01 ஆம் திகதியிலிருந்து 2017.05.31 ஆந் திகதி வரை சூரியவெவ சர்வதேச கிரிக்கட் மைதானத்தில் நடாத்தப்பட்டுள்ள கிரிக்கட் போட்டிகள் யாவை என்பதையும்;

(ii) அப் போட்டிகள் மூலம் ஈட்டப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) கிரிக்கட் வீரர்களுக்கு தங்குவதற்கு தேவையான நட்சத்திர வகுப்பிலான ஹோட்டல் ஒன்றை இம் மைதானத்துக்கு அண்டியதாக நிர்மாணிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

370/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2002 ஆம் ஆண்டில், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான லுல்கந்துர தோட்டத்தில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

425/ '19

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கதுறுகொட வரலாற்றுரீதியான தொல்லியல் இடம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி தொல்லியல் இடம் பற்றி மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வுகள் மற்றும் முற்றாய்வுகளுக்கிணங்க முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(iii) அதன் தாதுகோபுர நிலத்தை ஆக்கிரமித்து அத்துமீற்றிய குடியிருப்பாளர்கள் குடியமர்ந்துள்ளனரா;

(iv) அத்துமீறிய குடியமர்வுகள் காரணமாக தொல்லியல் இடத்திற்கு ஏற்பட்டுள்ள அழிவு பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(v) இந்த தொல்லியல் இடத்தை ஒரு மரபுரிமையாக பாதுகாக்க மேற்கொண்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

501/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.02.01 தொடக்கம் 2018.01.31 ஆம் திகதி வரை வழங்குனர்களினால் இலங்கை கடற்படைக்கு விநியோகிக்கப்பட்ட உணவு வகைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உணவை விநியோகித்த வழங்குனர்களின், உப வழங்குனர்களின், நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் போலி ஆவணங்களை சமர்ப்பித்து மற்றும் பெறுகை விதிகளுக்கு புறம்பாக செயற்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) பெறுகை குழுவின் அனுமதியின்றி பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பணிப்புரை வழங்கிய உத்தியோகத்தர்கள் மற்றும் பொருட்களுக்கு கட்டளை பிறப்பித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) சட்டவிரோதமாக கொள்வனவு செய்தமை காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி நட்டத்தை குறிப்பிட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

563/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த சில மாதங்களில் வடமேல் மாகாணத்தில் கடுமையான வறட்சி நிலவியதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அக்காலப்பகுதியில் கல்கமுவ தேர்தல் தொகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) வறட்சி நிவாரணம் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதியிலிருந்த உலர் உணவுப் பொருட்களின் விலைகள் சந்தை விலையை விடவும் அதிகமென்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அது தொடர்பாக ஆராய்ந்து அவசியமான நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

813/ '19

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு.— (2)

(அ) (i) வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளை நேர்முகப் பரீட்சை மூலம் அரசாங்க நிறுவனங்களில் பயிலுநர் பயிற்சிக்காக ஆட்சேர்ப்பதற்காக, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரினால் வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்துக்கேற்ப, விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்துள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நேர்முகப்பரீட்சைக்காக தோற்றிய பட்டதாரிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) நேர்முகப் பரீட்சையின் பின்னர், பயிற்சிக்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட பயிற்சிக்காக பட்டதாரிகளை ஆட்சேர்க்கையில் உள்வாரி மற்றும் வெளிவாரி பட்டதாரிகளாக அவர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளார்களா;

(ii) ஆமெனில், ஆட்சேர்க்கப்பட்டுள்ள வெளிவாரி பட்டதாரிகளின் எண்ணிக்கை மற்றும் உள்வாரி பட்டதாரிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) வெளிவாரி பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்குகையில் சிக்கலான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

828/ '19

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இறக்குமதி செய்யப்படுகின்ற உருளைக்கிழங்குக்கான வரி 20% ஆக குறைக்கப்பட்டுள்ளதென்பனையும்;

(ii) யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ உருளைக்கிழங்குக்கான உற்பத்திச் செலவு ரூபா 55/- ஆக காணப்படுகின்ற நிலையில், தற்போது இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ உருளைக்கிழங்கு சந்தையில் ரூபா 50/- இற்கு விற்கப்படுகின்றதென்பதனையும்;

(iii) பெப்ரவரி 15 ஆம் திகதியிலிருந்து யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு அறுவடைக்காலம் ஆரம்பமாகியிருக்கின்ற படியால், இறக்குமதி உருளைக்கிழங்குக்கான வரிக் குறைப்பு காரணமாக உள்ளூர் உருளைக்கிழங்கு செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உள்ளூர் உருளைக்கிழங்கு செய்கையாளர்களின் நன்மை கருதி உள்ளூர் உற்பத்தியின் விற்பனை நிறைவடையும் வரைக்கும் இறக்குமதி உருளைக்கிழங்கின் வரிக்குறைப்பு நீக்கப்பட்டு அவ்வரி அதிகரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமாவென்பதனையும்;

(ii) இத்தகைய நடவடிக்கை உள்ளூர் உற்பத்திகளின் (உருளைக்கிழங்கு - வெங்காயம்) அறுவடைக் காலத்திலிருந்து சரியாக ஒரு மாத காலத்திற்கு முன்னரே எடுக்கப்படுமாவென்தனையும்;

(iii) இதற்கென ஒரு நிரந்தரப் பொறிமுறையொன்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாவென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

872/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிரிஎல்ல, கடுகம்முல்ல, பஹல கலத்துர, கங்கராவத்த எனும் காணியில் 34 வீடுகளில் வதியும் 39 குடும்பங்களில் ஒரு பகுதி 1955 ஆண்டு தொடக்கமும், எஞ்சிய பகுதி 1978 ஆண்டு தொடக்கமும் நெற்செய்கையில் ஈடுபட்டு துன்பகரமாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதையும்;

(ii) இவர்களில் 4 குடும்பங்களுக்கு எதிராக அரசின் ஆட்சியுரிமையை மீளப்பெறும் நடவடிக்கையின் கீழ் இரத்தினபுரி நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அகற்றுவதற்கான தீர்மானம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்குடும்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டால், இவர்கள் பிள்ளைகளுடன் இடம்பெயரும் கதி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இந்நிலைமையின் கீழ் மேற்படி 64 ஏக்கர் காணியை கிராமங்களை விரிவாக்குவதற்காக சுவீகரித்து இக்குடும்பங்களுக்கிடையில் உரிய தரத்தில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

917/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தல விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(ii) மேற்படி பணம் பெறப்பட்ட தோற்றுவாய்கள் யாவை ;

(iii) மேற்படி விமான நிலையம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நாளில் இருந்து இற்றைவரை பெற்ற வருமானம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக உறப்பட்ட செலவுகள் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) இந்த விமான நிலையம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நாளில் இருந்து இற்றைவரை அங்கு வந்த விமானங்களின் எண்ணிக்கை மற்றும் விமானச் சேவை நிறுவனங்களின் பெயர்கள் யாவை;

(v) இந்த காலப்பகுதிக்குள் மத்தல விமான நிலையம் ஊடாக பயணித்த பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மத்தல விமான நிலையத்தை விருத்திசெய்தல் தொடர்பிலான நல்லாட்சி அரசாங்கத்தின் நோக்கு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

935/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலன்னாவ, அங்கொட, கொதட்டுவ, குமரின் மாவத்தை, இலக்கம் 229/3 ஏ என்ற முகவரியில் தற்போது வசித்துவரும் திருமதி பாத்திமா மும்தாஸுக்கு முறையே 21 மற்றும் 18 வயதுகளையுடைய ஊனமுற்ற சகோதரர்கள் இருவர் உள்ளனர் என்பதையும்;

(ii) பிறப்பிலேயே மனநிலை பாதிப்பிற்குள்ளான, பெற்றோரையும் இழந்துள்ள அந்த பிள்ளைகள் இருவருக்கும் ஊனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினால் மாதாந்தம் வழங்கப்படுகின்ற நிதியுதவி/ மருத்துவ உதவி இதுவரையில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) நிலையான வருமானம் இல்லாது நிர்க்கதியான குடும்ப உறுப்பினர்களான மேற்படி ஊனமுற்ற பிள்ளைகள் இருவருக்கும் மாதாந்த நிதியுதவி மற்றும் மருத்துவ உதவி என்பவற்றை தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

982/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" எனும் வேலைத்திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தின் கெக்கிராவ கல்வி வலயத்தில் அ/விஜிதபுர மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திக்காக நிதி வழங்கப்படும்போது பல குறைபாடுகள் ஏற்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை குறைபாடுகளோ தாமதமோ இன்றி மேற்படி வித்தியாலயத்திற்குப் பெற்றுக்கொடுப்பதற்காக ஏதேனும் முறையியல் வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1020/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நடப்பு அரசாங்கத்தினால் 500.00 ரூபாவிலான பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட்டு 3771 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை (iii ஆம் தரம்) ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு பரீட்சையொன்று நடத்தப்பட்டதென்பதையும்;

(ii) அப்பரீட்சையில் 75,000 இற்கும் அதிகமான விண்ணப்பதாரிகள் தோற்றினர் என்பதையும்;

(iii) அதில் சித்தியடைந்த 1904 பேருக்கு 2017 ஆம் ஆண்டு நியமனங்கள் வழங்கப்பட்டதென்பதையும்;

(iv) எஞ்சிய நபர்களுக்கு 2018 ஆம் ஆண்டு நியமனங்கள் வழங்கப்படுவதாக வாக்குறுதியளிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மத்தியிலிருந்து எஞ்சியுள்ள 1867 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில் அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1026/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அப்போதைய நிதி அமைச்சரின் "100 நாள் புரட்சி" பற்றிய கூற்றில் குறிப்பிடப்பட்டவாறு கர்ப்பிணி தாய்மாருக்கு ரூபா 20,000/- கொடுப்பனவு வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மேற்படி நலனை பெற்றுக்கொண்ட கர்ப்பிணி தாய்மாரின் பெயர் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கர்ப்பிணி தாய்மாருக்கு ரூபா 20,000/- வீதம் வழங்குவதற்கு அரசாங்கத்தினால் உறப்பட்ட மொத்த செலவினம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட கூற்றின் 7.29 இல் காட்டப்பட்டுள்ளவாறு வெளியிடப்பட்ட அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?